ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

பாண்டிச்சேரி

தேதி: 05-12-20

## வாழ்த்துச் செய்தி

நம் தாய்த்திரு நாட்டின் பாதுகாப்பிற்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு தன் இன்னுயிரையும் ஈந்த இந்திய இராணுவ வீரர்களின் தியாகத்தையும் விரத்தையும் போற்றி நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7-ஆம் நாளை கொடி தினமாக நாம் கடைபிடித்து வருகிறோம்.

நம் இராணுவ வீரர்கள் கடும் குளிர், பனி உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளையெல்லாம் பொருட்படுத்தாது நம் நாட்டின் எல்லைகளான காஷ்மீர், அருணாசல பிரதேசம் போன்ற மாநிலங்களில் அரணாக நின்று தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களையும் ஊடுறுவல்களையும் முறியடித்து நம்மைக் காத்து வருகின்றனர். அதுமட்டுமன்றி, பூகம்பம், ஆழிப்பேரலை, வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களிலும் இவர்களின் பணி மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். இதுபோன்ற தியாகப் பணியில் ஈடுபட்டிருக்கும் வீரர்களையும், ஓய்வு பெற்ற வீரர்களையும் மற்றும் அவர்களது குடும்பத்தினரையும் பாதுகாப்பது இந்தியராகிய நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

முன்னாள் படை வீரர்களின் நலனுக்காக நமது அரசு பல்வேறு நலத்திட்டங்களைச் சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, இவர்களின் நலனுக்காக புதுச்சேரி அரசு சார்பில் ரூ.50 இலட்சம் அரசு மானியமாகவும், மறுவேலை வாய்ப்புகளையும் வழங்கி கௌரவிக்கப்படுவதைக் கூறலாம்.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY ★ PUDUCHERRY ★ GOVERNMENT OF PUDUCHERRY

✆ அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413–2333135 இல்லம்: 2271232

ந. ரங்கசாமி
**முதலமைச்சர்**
புதுச்சேரி அரசு

பாண்டிச்சேரி

தேதி:



புதுச்சேரி மாநில மக்கள் அனைவரும் தாராளமாகக் கொடி நாள் நன்கொடை அளித்ததன் பயனாக 2008-09 ஆம் ஆண்டிற்கான சுழற்கோப்பையை மாண்புமிகு மத்திய இராணுவ அமைச்சர் திரு ஏ.கே. அந்தோனி அவர்கள் நமது புதுச்சேரி அரசுக்கு வழங்கியிருப்பது நமக்கெல்லாம் பெருமை சேர்க்கின்ற ஒன்றாகும்.

புதுச்சேரி மாநிலம் தொடர்ந்து இந்தப் பெருமையைத் தக்கவைத்துக்கொள்ளும் வகையில், நம் நாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள முப்படை வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அவர்களது குடும்பத்தாரின் நலத்திட்டங்களுக்கு பயன்படும் கொடிநாள் நிதிக்கு, எனது அன்பிற்குரிய புதுச்சேரி மாநில மக்களும் அரசு பணியாளர்களும் பள்ளி, கல்லூரி ஆசிரியர் மற்றும் மாணவ - மாணவியர்களும் ஏனைய தனியார் நிறுவனங்களும் தாராள மனப்பான்மையோடு வாரி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPARTMENT OF INFORMATION & PUBLICITY
PUDUCHERRY
GOVERNMENT OF PUDUCHERRY

**(ந. ரங்கசாமி)**

✆ அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413-2333135 இல்லம்: 2271232